சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි
23.10.2020 வெள்ளிக்கிழமை

## புதினம் தெரியுமோ?

நேற்று ஹக்கீமின்ர கட்சியில இருந்த நாலு எம்.பிக்களும் அங்காலிப் பக்கம் பாயப் போகினம் எண்டு ஒரு கிழமைக்கு முதலே தகவல் லீக் ஆகிட்டு. அப்பிடியிருந்தும் அவையை மறிக்காமல் எப்பிடித் தாவ விட்டார் ஹக்கீம் எண்டுறது தான் கனபேருக்குக் குழப்பம். ஆனா உண்மை வேற எண்டு பட்சிக்கு ஒரு தகவல் கிடைச்சிருக்கு. அப்பிடி அந்த நாலு பேரையும் மூன்றாம் பிறைக் கமல் மாதிரி தவாடா ராமா தாவு எண்டுற கணக்கில் பாயச் சொல்லி , ஊக்கம் கொடுத்ததே ஹக்கீம் தானெண்டு கதை பலமா அடிபடுது. 2




# முடக்கப்படுமா நாடு? இன்று இரவு முடிவு

இராணுவ தளபதி தெரிவிப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 23

நாடு முழுவதிலும் வார இறுதியில் ஊரடங்கை நடைமுறைப்படுத்துவதற்கான தேவை இதுவரையில் ஏற்படவில்லை. ஆனால், இன்று இரவு பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியான பின்னர் அது பற்றி ஆராயப்படும். இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். 2



## வவுனியாவில் 24பேருக்கு தொற்று

வவுனியா, ஒக். 23

வவுனியா வேலங்குளம் விமானப்படை முகாமில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் 24 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு 2

## சவேந்திர சில்வாவுக்கான பயணத்தடையை நீக்குக!

*அமெ. இராஜாங்கச் செயலரிடம் நேரில் கோருமாறு அரசுக்கு சஜித் யோசனை*

கொழும்பு, ஒக். 23

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கான பயணத்தடையை நீக்குமாறு அமெரிக்க இராஜாங்கச் செயலரிடம், அரசு கோரிக்கை விடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம 2

## முன்னணிக்கு முட்டுக்கட்டை போட்டது மாவட்ட நீதிமன்றம்

*மணி ஆதரவு உறுப்பினரின் நீக்கத்துக்கு இடைக்கால தடை*

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாண மாநகர சபையின் உறுப்பினர் மகேந்திரன் மயூரனை அந்தப் பதவியிலிருந்து நீக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தீர்மானத்துக்கு இடைக்காலத் தடை விதித்து யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் கட்டளையிட்டது. நவம்பர் 6ஆம் திகதி பிரதிவாதிகளான அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலை 2

புலிகள் மீதான தடை நீடிப்பு தவறானது:

## பிரிட்டனின் தீர்ப்பை வரவேற்கிறது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

கொழும்பு, ஒக். 23

பிரிட்டனில் தமிழீழ விடுதலைப் புலிகள்மீதான தடை நீடிப்பு தவறானது என்று வழங்கப்பட்ட தீர்ப்பை வரவேற்கின்றோம் என்று தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், உரையின் இறுதிப்பகுதியிலேயே இந்த வரவேற்பை தெரிவித்தார். (ஓ,44)

## சடலம் மீட்பு

பொலிஸார் மிரட்டியதால் தவறான முடிவு எடுத்தாரா?

யாழ்ப்பாணம், ஒக். 23

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதிக்கான நீர் விநியோகம் மேற்கொள்ளும் தாங்கியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது. தூக்கில் தொங்கிய நிலையில் அந்தச் சடலம் காணப்பட்டது. வட்டுக்கோட்டை சங்கரத்தை 2

## தப்பியோடிய நோயாளி பொலிஸாரால் கைது

கொழும்பு, ஒக். 23

கொஸ்கமை, ஸாலாவ மருத்துவமனையிலிருந்து தப்பி சென்ற கொரோனா நோயாளி பொரெல்லை பிரதேசத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். இன்று அதிகாலை 1 மணியள 2

## சாரதி, நடத்துநர் மனிதாபிமானத்தால் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம், ஒக். 23

சீதுவைப் பகுதியில் பணம் இன்றித் தவித்த 12 பேரை மனிதாபிமான அடிப்படையில் ஏற்றி வந்த பேருந்தின் நடத்துநரும் சாரதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். கம்பஹா மினுவாங்கொட பிரண்டக்ஸ் ஆடைத் தொழிலகத்தில் 2

## இரட்டைப் பிரஜாவுரிமைக்கு மட்டும் ஆதரவாக வாக்களித்தார் முஷாரப்!

கொழும்பு, ஒக். 23

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தின் 17ஆவது பிரிவான இரட்டைப் பிரஜாவுரிமைக்கு ஆதரவாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம்.எம்.முஷாரப் வாக்களித்துள்ளார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தின் இரண்டாவது வாசிப்பு 2

## இளைஞனின் சடலம் மீட்பு

கிளிநொச்சி, ஒக். 23

கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் தவறான முடிவெடுத்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள் 2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# முடக்கப்படுமா நாடு?...

அவர் மேலும் தெரிவித்ததாவது: “பேலியகொடை மீன் சந்தையுடன் தொடர்புடையதாக அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதுவரையில் வெளியாகியுள்ள பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில், அந்த மீன் சந்தையுடன் தொடர்புடைய 250 பேருக்கும் மேற்பட்டோர் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதியாகியுள்ளது. அவர்களில் 188 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். நேற்று அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களில் 79 பேர் கொழும்பைச் சேர்ந்தவர்களாவார். அத்துடன் களனியில் 53 பேரும், வத்தளையில் 9 பேரும், கடுவலையில் 6 பேரும், கிரிபத்கொடவில் 3 பேரும், வெல்லம்பிட்டியில் 9 பேரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதேவேளை, காலி மற்றும் பேருவளை மீன்பிடித் துறைமுகங்களில் செய்யப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 25 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அந்த இரண்டு மீன்பிடித் துறைமுகங்களையும் தற்காலிகமாக மூடுவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்நிலையில், பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புடையவர்களிடம் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் பெருமளவான முடிவுகள் இன்று இரவு வெளியாகவுள்ளன. இந்த முடிவுகள் வெளியான பின்னர் ஊரடங்கு தொடர்பாக அடுத்தகட்ட முடிவுகள் எடுக்கப்படும். நாடு முழுவதிலும் வார இறுதியில் ஊரடங்கை நடைமுறைப்படுத்துவதற்கான தேவை இதுவரையில் ஏற்படவில்லை. ஆனால், நேற்று மாலை பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியான பின்னர் அது பற்றி ஆராயப்படும், என்றார். ஏற்கனவே கம்பஹா மாவட்டத்துக்கும் கொழும்பு மாவட்டத்தில் 6 பொலிஸ் பிரிவுகளுக்கும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,22)

## சவேந்திர சில்வாவுக்கான...

தாச தெரிவித்தார்.
நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.
இதன்போது ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பி கருத்து வெளியிடுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் அமெரிக்க இராஜாங்கச்செயலர் மைக் பொம்பியோ ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.
எமது நாட்டு இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா வருவதற்கு அந்நாட்டால் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை நீக்கிக்கொள்வதற்கான நடவடிக்கையை இலங்கை அரசு முன்னெடுக்கவேண்டும். தடையை நீக்குமாறு அமெரிக்க இராஜாங்க செயலரிடம் நேரில் கோரிக்கை விடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதி பதவிக்கு நியமிக்குமாறு மைத்திரிபால சிறிசேனவிடம் நானே கோரிக்கை விடுத்தேன், என்றார் சஜித். இதற்குப்பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, பயணத்தடை விதிக்கப்பட்ட 24 மணிநேரத்திலேயே நாம் செயற்பட்டுவிட்டோம். தடையை நீக்குமாறு அதிகாரிகளுக்கும், அமெரிக்க இராஜாங்க செலயகத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த அரசுதான் ஜெனிவா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியது. அந்த தீர்மானத்தைக் கூட எமது அரசே நீக்கியது என்பதையும் நினைவூட்ட விரும்புகின்றோம், என்றார். (ஒ,44)

## சடலம் மீட்பு...

யைச் சேர்ந்த திவாகரன் (வயது 47) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
குடத்தனையில் தங்கியிருந்து நீர்த்தாங்கி அமைக்கும் பணியில் இவர் ஈடுபட்டு வருகின்றார்.
சில தினங்களுக்கு முன்னர் சங்கரத்தையிலுள்ள தனது வீட்டுக்குச் சென்று திரும்பி வந்துள்ளார். இவர் பணிக்காக தங்கியுள்ள இடத்திலிருந்து, கட்டடப் பொருள்கள் சில காணாமல் போயுள்ளன. இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார், மேற்படி நபரை அழைத்து விசாரித்துள்ளனர்.
பொலிஸார் தம்மை கடுமையாக அச்சுறுத்தினர் என்றும், அந்தத் திருட்டுச் சம்பவத்துக்கும் தனக்கும் தொடர்பில்லை என்று உயிரிழக்க முன்னர் அவர் உறவினர் ஒருவருக்கு தொலைபேசியூடாகக் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,160)

## சாரதி, நடத்துநர் மனிதாபிமானத்தால்...

பணியாற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 12 இளம் பெண்கள் கொரோனாத் தொற்றால் ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்டதாலும், கையிலிருந்த பணம் முடிவடைந்ததாலும் சொந்த ஊர் திரும்ப, சீதுவையில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் நின்று அங்கு வந்த யாழ்ப்பாணம் கொழும்பு பேருந்தில் ஏறியுள்ளனர். தம்மிடம் பணம் எதுவும் இல்லையெனத் தெரிவித்ததால், பயணச்சீட்டுக்களை வழங்கி அது தொடர்பாக நடத்துநர் யாழ்ப்பாணம் டிப்போவுக்கு அறிவித்துள்ளார்.
பருத்தித்துறையைச் சேர்ந்த 9 பேரும் நாவற்குழியைச் சேர்ந்த இருவரும் மிருசுவில் தெற்கைச் சேர்ந்த ஒருவருமாக 12 பேருடன் மேலும் மூவர் பேருந்தில் பயணித்துள்ளனர்.
பேருந்து இரவு 11.30 மணிக்கு யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு வந்த போது அங்கு யாழ்ப்பாணம் மாநகரசபை பொது சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், அவர்கள் அனைவரையும் பரிசோதனை செய்து தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கினர். பேருந்தின் சாரதியும் நடத்துநரும் குடும்பத்தினருடன் அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டனர்.
பேருந்தில் தமது பிள்ளைகள் வருவதை அறிந்த பெற்றோர் மற்றும் உறவினர்கள் பேருந்து நிலையத்துக்குச் சென்று பயணச்சீட்டுக்குரிய பணத்தைச் செலுத்தியுள்ளனர்.
கொரோனா பிரதேசம் என்று அறிந்தும் மனிதாபிமான அடிப்படையில் 12 இளம் பெண்களையும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்த நடத்துநரையும் சாரதியையும் மக்கள் பாராட்டியுள்ளனர். (ஒ,9)

## இளைஞனின் சடலம்...

ளார். கிளிநொச்சி விவேகானந்த நகரைச் சேர்ந்த கோமாறன் (வயது 19) என்னும் இளைஞரே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ஒ,ரி1)

## இரட்டைப்...

மீதான வாக்கெடுப்பில் எதிராக இவர் வாக்களித்த நிலையிலேயே குறித்த உப பிரிவுக்கு ஆதரவாக வாக்களித்தார்.
எனினும், மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் (இறுதி வாக்கெடுப்பில்) எதிராக வாக்களித்தார்.
இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட முடியும் என குறித்த பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு வாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என எதிர்க்கட்சியினர் வேண்டுகோள் விடுத்தனர். இதன்போது 157 பேர் ஆதரவாகவும், 64 பேர் எதிராகவும் வாக்களித்திருந்தனர். (ஒ,22)

## புதினம் தெரியுமோ?

ஏனெண்டால் ஐக்கிய மக்கள் சக்தி தங் களுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் தரேலை எண்டு கொஞ்சக் காலமா பகிரங்கமா மீற்றிங்குகளில , புறுபுறுத்துக்கத் தொடங்கியிருந்தார் ஹக்கீம். அப்பவே கனபேருக்கு டவுட். வழக்கம்போல, கட்சி மாற பிளான் பண்ணுறாரோ எண்டு. அது இப்ப உண்மையாகிட்டு.
இருபதுக்கு ஆதரவு தரச் சொல்லி, ஆளும் தரப்பு தூது விடேக்க ஹக்கீம் சில டீலுகளெல்லாம் பேசி, அது படிஞ்சதால தான், தன்ர ஆக்கள் நாலு பேரை தாவச் சொல்லியிருக்கிறார். அதை ஆளும் தரப்பிட்டயும் முன்னமேயே அறிவிச்சிட்டார்.
நான் இப்ப வந்தால் சிக்கல். முதல்ல இவை எனக்கு தெரியாமல் வாற மாதிரி வரட்டும். பிறகு நான் வாறன் எண்டு அவர் சொன்னதை அவையும் ஆமோதிச்சு, சிலபல பெட்டியளை அனுப்பி வைச்சினமாம். அதுக்குப் பிறகுதான், ஹக்கீமின்ர ஆதரவோட இந்தப் பாய்ச்சல் நடந்ததெண்டு எல்லாரும் அடிச்சுச் சத்தியம் செய்யினம். இன்னும் ரண்டு மூண்டு நாளில அவரும் அங்காலிப் பக்கம் போடுவாராம். பாப்பம், எது உண்மையெண்டு.

– பட்சி

## முன்னணிக்கு...

வர் ஆனந்தராசா, பொதுச் செயலர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரை மன்றில் முன்னிலையாக உத்தரவிட்ட மாவட்ட நீதிமன்றம் அன்றுவரை இடைக்காலத் தடைக் கட்டளை வலுவில் இருக்கும் என்று அறிவித்தது.
அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தெரிவாகிய மகேந்திரம் மயூரன், தமது பங்காளிக் கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து நீக்கப்பட்டதால் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறு அந்தக் கட்சி யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகரிடம் கேட்டுக்கொண்டது.
அதனடிப்படையில் மகேந்திரன் மயூரனின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவி தவறிதாகியதாக யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகரால் அவருக்கு அறிவிக்கப்பட்டது.
தனது உறுப்புரிமை நீக்கத்தை சவாலுக்குட்படுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் மகேந்திரன் மயூரன் நீதிப்பேராணை மனுவை சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஊடாகத் தாக்கல் செய்தார். மனுவின் பிரதிவாதிகளாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் ஆனந்தராசா, பொதுச் செயலர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகர் உள்ளிட்ட நான்கு தரப்பினரை மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.
தனது பதவி நீக்கத்தை சட்ட வலுவற்றதாக உத்தரவிடுமாறு கோரிய மனுதாரர், அதன் மீதான விசாரணை நிறைவடைந்து இறுதிக் கட்டளை வரும் வரை இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்குமாறும் கோரியிருந்தார். இந்த மனு இன்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி.இராமக்கமலன் முன்னிலையில் அழைக்கப்பட்டது. மனுதாரரின் விண்ணப்பம் முகத்தோற்றளவில் மன்றுக்கு திருப்திப்படுத்துவதால் இடைக்காலத் தடையை வழங்கி மாவட்ட நீதிமன்றம் கட்டளையிட்டது. அத்தோடு மனுவை பரிசீலனைக்கு எடுக்க பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்க உத்தரவிட்டது. (ஒ,26)

# 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு 19 தமிழ் எம்.பிக்கள் எதிர்ப்பு!

## 9 பேர் மாத்திரமே ஆதரவு

கொழும்பு, ஒக். 23
நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 28 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 19 பேர் அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராகவும், 9 பேர் ஆதரவாகவும் வாக்களித்துள்ளனர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (10), தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (2), தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி (1), தமிழ் முற்போக்குக் கூட்டணி (அரவிந்குமார் தவிர 5 பேர்) ஆகிய கட்சிகளின் உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியின் தமிழ் எம்.பி. வடிவேல் சுரேஷும் எதிராக வாக்களித்தனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (2), ஈ.பி.டி.பி. (2), தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (1) ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினரான அங்கஜன் இராமநாதன், சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் உள்ள எஸ்.வியாழேந்திரன், தேசியப் பட்டியல் எம்.பி. சுரேன் ராகவன் ஆகியோரும் 20 இற்குச் சார்பாக வாக்களித்தனர். அரவிந்குமார் எம்.பியும் இந்தப் பட்டியலில் இணைந்தனர். (ஒ,22)

## தப்பியோடிய...

வில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 26 வயதுடைய இளைஞர் அதிகாலை ஆறு மணியளவில் தப்பி ஓடியுள்ளார். இதைத் தொடர்ந்து பொலிஸார், இராணுவத்தினர் தீவிர தேடுதல்களை மேற்கொண்டிருந்தது டன், தப்பியோடிய நோயாளியின் ஒளிப்படம் மற்றும் விவரங்களை ஊடகங்களில் வெளியிட்டிருந்தனர். இந்த நிலையில் அவர் நேற்று மதியமளவில் கைதாகியுள்ளார். (ஒ,இ)

## வவுனியாவில்...

வந்தவர்கள் வேலங்குளம் விமானப்படை முகாமில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தன. இன்று மதியம் வெளியாகிய பிசிஆர் பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் 24 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஒ,18)

## காணி அபகரிப்பு விவகாரம்:

# தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமல் ராஜபக்சவுடன் கூட்டாகச் சந்திப்பு

கொழும்பு, ஒக். 23
ஆளும் மற்றும் எதிர்தரப்பிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மகாவலி அபிவிருத்தி அமைச்சர் சமல் ராஜபக்சவுக்கும் இடையிலான உயர்மட்ட கலந்துரையாடல் இன்று இடம்பெற்றது.
நாடாளுமன்ற கட்டடத் தொகுதி வளாகத்தினுள் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.
தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், கோவிந்தம் கருணாகரன், இரா.சாணக்கியன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், அரச தரப்பில் வியாழேந்திரன், சுரேன் ராகவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
முல்லைத்தீவில் செம்மலை தொடக்கம் கொக்கிளாய் வரையான தமிழ் மக்களின் 8 பூர்வீக கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளை கரைத்துரை பற்று பிரதேச செயலகத்தின் ஆளுகையிலிருந்து மகாவலி அதிகாரசபையிடம் ஒப்படைக்க இரண்டு வாரங்களின் முன் உத்தரவிடப்பட்டிருந்தது. இது தொடர்பிலும், மட்டக்களப்பில் மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்பு தொடர்பிலும் இந்த கலந்துரையாடல் நடந்து வருகிறது.

**பின்னணி**
முல்லைத்தீவில் கொக்குளாய் தொடக்கம் செம்மலை வரையான தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை முழுமையாக மகாவலி அதிகாரசபையிடம் கையளிக்கும்படி, கரைத்துரைபற்று பிரதேச செயலருக்கு சில தினங்களின் முன்னர் ஜனாதிபதி செயலகத்திலிருந்து கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.
இதையடுத்து, தமிழர் மரபுரிமை பேரவை உள்ளிட்ட தன்னார்வலர்கள் இணைந்து இது தொடர்பான கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர்.
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் சுரேஷ்; பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், சிறிகாந்தா உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், மத தலைவர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.
இரண்டு வாரங்களின் முன்பாக நடந்த இந்த கலந்துரையாடலின் விவரங்கள் வெளியில் கசிந்து சர்ச்சையை ஏற்படுத்தாமல், பேச்சுமூலம் இந்த விவகாரத்தை கையாள கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருந்தது. அரச தரப்பினரை சந்தித்து இந்த விவகாரங்களை ஆராய்வதென எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் இந்த சந்திப்பு நடந்தது. (ஒ,இ)

## 44 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு தொடர்ந்தும் அமுல்

கொழும்பு, ஒக்.23
நாட்டின் 44 பொலிஸ் பிரிவுகளில் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளதாவது,
ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் மக்கள், வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றி செயற்படுதல் அவசியம். அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோர் தங்களின் அலுவலக அடையாள அட்டைகளை ஊரடங்கு அனுமதிப்பத்திரமாக பயன்படுத்த முடியும். எனினும், அலுவலக வேலை நேரம் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் அவற்றை பயன்படுத்த முடியாது எனத் தெரிவித்துள்ளார். கம்பஹா மாவட்டத்திலுள்ள 33 பொலிஸ் பிரிவுகளிலும் கொழும்பு வடக்கு பிராந்தியத்தில் 5 பொலிஸ் பிரிவுகளிலும் வெல்லம்பிட்டிய மற்றும் குளியாப்பிட்டியவில் 5 பொலிஸ் பிரிவுகளில் இந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. (-இ)

## 100 சாரய போத்தல்களுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 23
100 கால் போத்தல் சாராயப் போத்தல்களுடன் முச்சக்கரவண்டி சாரதி இன்று காலை கைது செய்யப்பட்டுள்ளார்.
நெல்லியடி நகர்ப்பகுதியில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக் கமைய 56 வயதுடைய பருத்தித்துறையைச் சேர்ந்த சந்தேகநபரைக் கைதுசெய்ததுடன் சாராயப்போத்தல்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ஒ,26)

# முஸ்லிம் எம்.பிக்களாலேயே '20' நிறைவேறியது!

## இனியாவது சடலத்தை அடக்கம்செய்ய அனுமதி தாருங்கள் என்கிறார் முஜிபூர்

கொழும்பு, ஒக். 23
முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன்தான் '20'ஆவது திருத்தச்சட்டத்தை அரசு நிறைவேற்றியது.
கொரோனா தாக்கத்தால் முஸ்லிம் மக்கள் எவராவது உயிரிழந்தால் சடலத்தை அடக்கம் செய்வதற்கு இனியாவது அனுமதி வழங்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இந்த கோரிக்கையை விடுத்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா பரவலையடுத்து உலக சுகாதார அமைப்பால் கடந்த மார்ச் 20 ஆம் திகதி வழிகாட்டல்கள் அறிக்கையொன்றை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கைதான் இன்னும் நடைமுறையில் உள்ளது. கொரோனா வைரஸ் தொற்றால் எவராவது உயிரிழந்தால் அவரின் சடலத்தை எரிக்கலாம் அல்லது அடக்கம் செய்யலாம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. விஞ்ஞானபூர்வமாகவே இந்த பரிந்துரை முன்வைக்கப்பட்டது. உலகில் பல நாடுகள் இந்த நடைமுறைகளைப் பின்பற்று கின்றன.
எனினும், இலங்கையில் அடக்கம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. எரிக்க மட்டுமே வேண்டும் என அரசியல் ரீதியில் முடிவெடுக்கப்பட்டது. இது தொடர்பில் மீள்பரிசிலனை செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. 6 மாதங்களின் பின்னர் பரிசிலிக்கலாம் எனக் கூறப்பட்டது. அந்தக் கால எல்லை தற்போது முடிவடைந்துவிட்டது. எனினும், இது தொடர்பில் சுகாதார அமைச்சு எந்தவொரு கலந்துரையாடலையும் நடத்தவில்லை.
அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிரணியில் இருந்து 6 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினர். அதனால்தான் 20 நிறைவேறியது. எனவே, அவர்கள் வழங்கிய ஆதரவை கருதியாவது உரிய முடிவை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன், என்றார். (ஒ,44)

# அத்தியாவசிய பொருள்களின்றி சதொச விற்பனை நிலையம்

முல்லைத்தீவு, ஒக்.23

முள்ளியவளை நீராவிப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்தில் பல அத்தியாவசிய பொருள்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

நாட்டில் அரசாங்கம் சீனி உள்ளிட்ட பொருள்களுக்கு விலை குறைப்பு செய்துள்ளபோதும் விற்பனை நிலையத்தில் சீனி, பருப்பு, புளி, உள்ளி உள்ளிட்ட பொருள்கள் பற்றாக்குறையாக காணப்படுகின்றன. அத்துடன் முல்லைத் தீவு மாவட்டத்தில் காணப்படும் இரண்டு சதொச விற்பனை நிலையங்களில் தற்போது முள்ளியவளை பகுதியில் உள்ள ஒரு விற்பனை நிலையமே இயங்கி வருகின்றது. புதுக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையம் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இயங்காத நிலை காணப்படுகின்றது.

இதனை இயக்குவதன் ஊடாக வறிய மக்கள் குறைந்த விலையில் பொருள்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று மக்கள் தெரிவித்துள்ளார்கள். (ந-19)





## தேசிய வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை திட்டம்

திருமலை, ஒக்.23

வீட்டுப் பொருளாதார போசனையை மேம்படுத்தி குடும்ப அலகுகளை வலுவூட்டுவதற்கான தேசிய வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைய வீட்டுத் தோட்ட மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை தம்பலகாமம் முள்ளிப்பொத்தானை வடக்கு கிராம சேவகர் பிரிவில்,தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி வங்கி முகாமையாளர், முள்ளிப்பொத்தானை வடக்கு பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அரசின் தேசிய வேலைத் திட்டம் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு இச் செயற்றிட்டத்தில், குறித்த பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ந-40)

## வழமைக்குத் திரும்பும் மன்னார் ஆயர் இல்லம்

மன்னார், ஒக்.23



கொவிட் -19 பரவல் காரணமாக மன்னார் ஆயர் இல்லத்தில் சுய தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டிருந்த 18 பேரும் இன்று முதல் தமது தனிமைப்படுத்தலை நிறைவு செய்கின்றனர் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லத்துடன் சம்பந்தப்பட்ட கட்டடம் ஒன்றுக்கு வெளி மாவட்டத்திலிருந்து கட்டடத் தொழிலாளியாக வந்த நபர் ஒருவரிடம் கொவிட் 19 தொற்று கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மன்னார் பட்டித்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள மன்னார் ஆயர் இல்லம் கடந்த இரு வாரங்களாக தனிமைப் படுத்தப்பட்டிருந்தது.

ஆயர் உள்பட அருட்பணியாளர்கள் அங்கு பாதுகாப்பு கடமையில் இருந்த பாதுகாப்பு படையினர், ஆயர் இல்லத்தில் கடமைபுரிந்து வந்து வேலையாட்கள் ஆயியோர் உள்ளிட்ட 18 பேர் ஆயர் இல்லத்திலேயே சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இவர்கள் கடந்த 14 நாட்களாக சுயதனிமைப்படுத்தலில் இருந்த நிலையில், இவர்களுக்கு இறுதியாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவர்கள் அனைவரும் இன்று முதல் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்தார். அத்துடன் இதுவரைக்கும் மன்னார் மாவட்டத்தில் இனங்காணப்பட்ட 1,862 பேர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-60)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்திட்டத்தின்கீழ் கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் பகுதியில் வாழும் பொருளாதாரம் நலிவான குடும்பத்தின் மாணவனுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது. (ந-222)



## நாட்டின் பல பகுதிகளில் மழைக்குச் சாத்தியம்

கொழும்பு, 23

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் பல இடங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் பல இடங்களிலும் மழை பெய்யக்கூடும் என்று வானிலை அவதான மையம் தெரிவித்துள்ளது.

வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மத்திய மலைப்பிராந்தியங்களின் மேற்கு சரிவுகளிலும் மணித்தியாலத்திற்கு 50 கிலோ மீற்றர் வேகத்திலான ஓரளவு பலத்த காற்று இடைக்கிடையே வீசக்கூடும்.

நீர்கொழும்பு தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக மாத்தறை வரையான கடல் பிராந்தியங்களில் சிறிதளவு மழை பெய்யக்கூடும். நாட்டைச் சூழவுள்ள கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 3040 கிலோ மீற்றர் வேகத்தில் மேற்குத் திசையில் இருந்து தென்மேற்குத் திசையை நோக்கி காற்று வீசும். இதே வேளை நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பான நிலையில் காணப்படும். (ந-இ)

## குடிதண்ணீரின்றி கற்குவாரி மக்கள்

வவுனியா, ஒக்.23

மாங்குளம் கற்குவாரி பகுதி மக்கள் குடிதண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுமார் எழுபத்து ஐந்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழும் இந்த குடியிருப்பு பதுதியில் பொதுக்கிணறு ஒன்று உள்ள போதும் அதில் நீர் வற்றியுள்ளது. இந் நிலையில் இப் பகுதியில் பொதுவாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறைப் பூரணபடுத்தி மக்கள் பயன்பாட்டுக்கு விடாதநிலையும் காணப்படுகிறது. இது தொடர்பில் சம்மந்தப்பட்ட பலருக்கும் தெரியப்படுத்தியபோதும், இதுவரை குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லையென இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ந-ரி1)





முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்கு அலுமாரி ஒன்று நேற்றையதினம் வழங்கப்பட்டது. மாவட்ட பொது வைத்தியசாலையின் நிர்வாகத்தினர் விடுத்த கோரிக்கைக்கமைவாக இவ் அலுமாரி கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் தவராசா அமலனினால் கையளிக்கப்பட்டுள்ளது. (ந-ரி2)



# 'மாஸ்க்' கை வீசுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு,ஒக். 23

முகக்கவசங்களை சுகாதார முறையில் அகற்றாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலர் முகக்கவசங்களை அணிந்துவிட்டு அதனை பாதுகாப்பற்ற முறையில் வீசிச் செல்வதால் ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். நீக்கப்படும் முகக்க வசங்களை வீதிகள் மற்றும் பொது இடங்களில் பாதுகாப்பு நடைமுறைகளைக் கருத்திற் கொண்டு குப்பைத் தொட்டியில் அல்லது உரிய இடத்தில் போடுமாறு பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், தனிமைப்படுத்தல் சட்டத்துக்கமைய முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனினும் அதனை சுகாதார முறையில் அகற்றாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)



# ஹற்றன் பிரதேசத்துக்கு மூவாயிரம் புதிய வீடுகள்

ஹற்றன், ஒக்.23

ஹற்றன் நகரிலுள்ள 3 ஆயிரத்துக்கும் அதிகமான குடிசை வீடுகளை அகற்றி, அவர்களுக்கான வீடுகளைப் பெற்றுக்கொடுக்கும் திட்டத்தை செயற்படுத்துவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ், நுவரெலியா மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் பிரதமர் தலைமையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஹற்றன் நகர அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், ஹற்றனிலிருந்து தலவாக்கலை, ஸ்ரீபாத வரையான பிரதேசத்தில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கும் பிரதமர் இதன்போது அறிவுறுத்தினார்.

அதுமட்டுமன்றி நுவரெலியா பிரதேசம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் சுற்றுலா நகரங்களாக மாற்றுவது தொடர்பில் பிரதமர் இதன்போது கவனம் செலுத்தியுள்ளார்.

அந்தவகையில், கிரகரி குளம் மற்றும் குதிரை பந்தய மைதானம் ஆகியவற்றை அண்மித்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்து குதிரைப் பந்தயத்தை மீண்டும் ஆரம்பித்து நகரை அண்மித்துள்ள பூங்காக்களின் தரத்தை உயர்த்துதல், நுவரெலியா நகரில் விளையாட்டுத் துறை சார்ந்த வசதிகளை மேம்படுத்துதல், கேபல் கார் திட்டம் மற்றும் கேளிக்கை பூங்காவுக்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து சுற்றுலா வசதிகளை உச்ச அளவில் அபிவிருத்தி செய்வதற்கு பிரதமர், சம்பந்தப்பட்ட துறையினருக்கு இதன்போது அறிவுறுத்தினார். (ற-இ)



# பேலியகொட சென்றோர் தொடர்பு கொள்ளவும்

கொழும்பு, ஒக்.23

கடந்த ஏழு தினங்களில் பேலியகொட மீன்சந்தைக்கு சென்றவர்கள் தமது பிரதேச பொது சுகாதார பரிசோதகர் ஊடாக பி.சி.ஆர் பரிசோதனையை செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கொவிட்-19 பரவலை கட்டுப்படுத்தும் தேசிய மத்திய நிலையத்தின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். மேலும், கடந்த இரண்டு வார காலப்பகுதிகளில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயிரத்து 800 பேர் நேற்று தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

பேலியகொடை கொரோனாத் தொற்று :

# பி.சி.ஆர் சோதனை முடிவுகள் இன்று

கொழும்பு, ஒக்.23

பேலியகொடை மீன் சந்தையில் கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டவர்களிடம் நெருங்கிய தொடர்புகளைப் பேணிய 312 பேரின் பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் இன்று அறிவிக்கப்படும் என கொழும்பு நகராட்சி மன்றத்தின் தலைமை மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

இது தவிர அவர்களிடம் தொடர்புகளை பேணிய நபர்களிடம் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பேலியகொட மீன் சந்தையில் இதுவரையில் 237 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் அவர்களுடன் தொடர்புகளைப் பேணியிருக்கலாம் எனும் சந்தேகத்தின் பேரில் மேலும் 1600 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ந-இ)

# ஊரடங்கை மீறிய பஸ்: சாரதி பொலிஸில்

ஊரடங்குச் சட்டத்தை மீறும் வகையில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் கொழும்பு கண்டி பிரதான வீதி, தங்கோவிட்ட பகுதியில் பஸ்ஸை நிறுத்தி அங்கிருந்த பயணிகளை ஏற்றிய நெடுந்தூர போக்குவரத்து சேவை தனியார் பஸ்ஸிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அப் பயணிகள் வேறு இரு பஸ்களில் ஏற்றி அனுப்பப்பட்டுள்ளனர். குருநாகல் தனியார் பஸ்ஸொன்றே இவ்வாறு மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது. பஸ்ஸின் நடத்துநர் பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டதுடன், பஸ்ஸின் சாரதி சட்ட நடவடிக்கைகளுக்காக நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# மோ.சைக்கிள் – டிப்பர் விபத்து: சிறுமி உயிரிழப்பு

மாரவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திஹகொட, குடாபான சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முலடியன பகுதியை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று கிளை வீதியினூடாக பிரதான வீதிக்கு வந்த டிப்பரில் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மற்றும் மோட்டார் சைக்கிள் பின்னால் அமர்ந்து சென்ற சிறுமி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிறுமி (வயது 13) உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-இ)

# மஸ்கெலியா மக்களுக்கு கொவிட்-19 விழிப்புணர்வு

மஸ்கெலியா, ஒக்.23

மஸ்கெலியா லெமன் மோரா தோட்ட மக்களுக்கு கொவிட்-19 பற்றிய விழிப்புணர்வு சுகாதாரத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டது.

மஸ்கெலியா பிரதேசசபைக் குட்பட்ட லெமன் மோரா தோட்டத்தைச் சேர்ந்த, கொழும்பு மெனிங் சந்தையில் சிறு வியாபாரம் மேற்கொண்டு வந்த இரு இளைஞர்களில் ஒருவருக்கு கொவிட் 19 தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றைய இளைஞருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டு 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். இந் நிலையிலேயே இவ் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெளியிடங்களில் இருந்து மஸ்கெலியா பகுதிகளுக்கு வருவோர் தங்களது விவரங்களை அப்பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்திலும், சுகாதார பிரிவிலும், கிராம சேவகர் பிரிவிலும் பதிவு செய்வதன் மூலம் மலையகத்தில் இந்த நோய் பரவாது தடுக்க முடியும். முதல் முறை மலையகத்தில் இவ்வாறான நிலை தோன்றவில்லை.

ஆனால் இம்முறை சமூகப்பரவல் என்பதால் அதிகளவு இந்த நோய் பரவ வாய்ப்புள்ளது. ஆகையால் வெளியிடங்களில் இருந்து வருவோர் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார முறைகளைப் பின்பற்றி நடந்துகொள்வதுடன் அரசின் கட்டளைகளை பின்பற்றுமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம் என இப் பகுதி சுகாதார அதிகாரி தெரிவித்தார். (ந)

# கொரோனா அபாயம்: ‘பார்’ களுக்கு பூட்டு?

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஒக்.23

கொரோனாத் தொற்று அதிகரிக்கக் கூடிய அபாய நிலைமை ஏற்பட்டுள்ளதால் மக்களின் நோய் எதிர்ப்பு சக்தியை உறுதி செய்வதற்கு நாடு முழுவதும் உள்ள மதுபான விற்பனை நிலையங்களை மூட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் நாள் ஒன்றுக்கு 10,000 பி.சி.ஆர். பரிசோதனைகளை நடத்துதல், ஆபத்து நிலையில் இல்லாதவர்களை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தல், மக்கள் சுகாதார பழக்கவழக்கங்களைப் பின்பற்றுதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதன் மூலம் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும்.

கொரோனாத் தொற்று சமூகத் தொற்றாக பரவியுள்ளதா என்பதை உறுதியாக கூறுமளவுக்கு புள்ளிவிபரத் தகவல்கள் எங்களிடம் இல்லை. அத்துடன் தொற்று நோயியல் தடுப்புப் பிரிவு தகவல்களைப் பகிர்ந்து கொள்வதில்லை.

முக்கியமான தொழில்நுட்ப புள்ளி விபரங்களை வழங்காமையின் பொறுப்பை தொற்று நோயியல் தடுப்புப் பிரிவு ஏற்றுக்கொள்ள வேண்டும். கொரோனா நோய்த் தொற்று பரவுகையை எந்தவொரு தரப்பும் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்த வேண்டாம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் கோரியுள்ளது என்று மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ற-இ)

## திருமலை சிறைக் கைதிகளுக்கு பொருள்கள் வழங்க அனுமதி

திருகோணமலை, ஒக்.23

திருகோணமலை சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்குத் தேவையான பொருள்களை உறவினர்கள் வழங்குவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் தாக்கம் காரணமாக திருகோணமலை சிறைச்சாலையில் உள்ள கைதிகளைப் பார்ப்பதற்கும், அவர்களுக்குத் தேவையான பொருள்களை உறவினர்கள் வழங்குவதற்கும் சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், தற்போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கைதிகளுக்குத் தேவையான பொருள்கள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

## எம்.பி டயானா கமகேவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஒக.23

நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகேவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

20ஆம் திருத்தச் சட்டவரைவுக்கு ஆதரவாக வாக்களித்ததையடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்நிலையில், 20ஆம் திருத்தத்துக்கு ஆதரவளித்திருந்தாலும் அரசாங்கத்தினது வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளப் போவதில்லை என டயான கமகே குறிப்பிட்டுள்ளார். எனினும், எதிர்வரும் சில தினங்களில் டயானா கமகே இராஜாங்க அமைச்சுப் பதவி ஒன்றினை பெற்றுக்கொள்ளவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## ஜனாதிபதியை தெரிவு செய்த பின் அவரது கைகளைக் கட்டிவிடுவதில் பயனில்லை

### எம்.பி. டயானா கமகே தெரிவிப்பு

கொழும்பு, 23



ஜனாதிபதி ஒருவரைத் தெரிவுசெய்த பின்னர், அவரது கைகளைக் கட்டிவிடுவதால் எவ்வித பயனுமில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

நாட்டைக் கொண்டு நடத்துவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டவரைபுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்த்து வாக்களித்திருந்த நிலையில், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே ஆதரவாக வாக்களித்திருந்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

எவ்விதப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமலேயே அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைபுக்கு ஆதரவாக வாக்களித்தேன்.

ஜனாதிபதி ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்காகவே, ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது. ‘ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்துவிட்டு அவரது கைகளைக் கட்டி ஆற்றில் வீசி விட்டு நாம் நீந்துவது சரியா? அவர் மூழ்கும் வரை நாம் காத்திருக்கிறோம். நீங்கள் மூழ்கிவிடுங்கள் என்று நாம் கூறுகின்றோம். இது என்ன ஒரு நகைச்சுவை.

‘நாட்டின் ஜனாதிபதிக்கு நாட்டைக் கொண்டு நடத்துவதற்கான அதிகாரங்கள் இருக்க வேண்டும். வெறும் நிர்வாகியாக இருப்பதற்கு, ஜனாதிபதி ஒருவர் தேவையில்லை. எந்தக் கோழைக்கும் ஒரு பெயரைக் கொடுத்து அவரைத் தூண்டிவிட முடியும். நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டே அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டவரைபுக்கு ஆதரவாக வாக்களித்தேன். ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. அவர் இந்த நாட்டைக் கட்டியெழுப்புவார்’ என்று தெரிவித்துள்ளார். (ற-இ)

## ஊரடங்குச் சட்ட மீறல்; ஒரு நாளில் 88 பேர் கைது

கொழும்பு, ஒக.23

தனிமைப்படுத்தல் ஊரடங்கை மீறிப் பயணித்த குற்றச்சாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் 88 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். இதற்கமைய, தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்ட மீறல் தொடர்பில் இதுவரை 691 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இந்தக் காலப்பகுதியில் ஊரடங்கு சட்ட விதிமுறைகளை மீறி பயணித்த 92 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (வ-இ)

# முஸ்லிம் எம்.பிக்கள் ‘20’ க்கு ஆதரவு; முழு இலங்கையருக்கும் செய்த துரோகம்

## சாடுகிறார் இம்ரான் எம்.பி

கொழும்பு, ஒக்.23

ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு இருபதாம் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம் சமூகத்துக்கு மட்டுமல்லாமல் முழு இலங்கையருக்கும் வரலாற்றுத் துரோகம் இழைத்துள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்துள்ளார்.

இருபதாம் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

முஸ்லிம்கள் “தொப்பி பிரட்டிகள்” என்று பெரும்பான்மை சமூகத்தினர் எம்மை அடிக்கடி விமர்சிப்பார்கள். இவர்கள் இவ்வாறு விமர்சிப்பதை இந்த



முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்மை என்று நிரூபித்துள்ளனர். இவர்கள் செய்தது முஸ்லிம் சமூகத்துக்கு மட்டுமல்லாமல் முழு இலங்கையருக்குமான வரலாற்று துரோகம். இவர்கள் ஆதரவு அளித்ததால்தான்இன்றுஇந்தசட்டவரைபு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவர்கள் இந்த அரசுக்கு வழங்கிய இந்த அதிகாரம் மூலம் விசேடமாக கிழக்கில் தொல்பொருள் செயலணி போன்று பல வழிகளில் பறிபோகவுள்ள எமது காணிகளுக்கும், சிங்கள குடியேற்றங்களுக்கும், எமது உரிமைகளுக்கும் என்ன தீர்வை வழங்கப்போகிறார்கள்.

இவர்கள் இன்னும் ஓரிரு தினங்களில், ஊடகங்கள் முன்வந்து எமது மாவட்ட அபிவிருத்திக்காக ஆதரவாக வாக்களித்தோம் என்று கூறுவார்கள். பசி என்பதற்காக காரமான உணவுகளை என்னால் உண்ண முடியாது. இவர்கள் உண்பார்களா என்று எனக்குத் தெரியாது.

எதிர்வரும் காலங்களில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நாம் அமைக்கவுள்ள ஆட்சியில் இவர்களுக்கு நாம் சிறந்த பதிலை வழங்குவோம் -என்றார். (ற-இ)

# ரிஷாட், ஹக்கீமின் கட்சிகளை கூட்டணியிலிருந்து நீக்கவும்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் சஜித்திடம் கோரிக்கை

கொழும்பு, ஒக்.23

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளை நீக்குமாறு கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாசவிடம், ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு ஏனைய எம்.பிக்களும் ஆதரவு வழங்கியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று நடைபெறும் கூட்டத்தில் இது தொடர்பில் ஆராயப்படும் என்பதுடன், இறுதி முடிவு விரைவில் எடுக்கப்படும் என நம்மப்படுகின்றது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு மீதான வாக்கெடுப்பு நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இதன்போது இச்சட்ட வரைவுக்கு ஆதரவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் நால்வரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவரும் வாக்களித்தனர். அத்துடன், இரட்டைக் குடியுரிமை குறித்த சரத்துக்கு ரிஷாட் அணியின் மேலும் ஒரு எம்.பியும் ஆதரவு வழங்கியிருந்தார். "ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் இருந்து கொண்டு இவ்விரு



கட்சிகளும் ஆதரவு வழங்கியதாலேயே அரசாங்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் கிடைத்தது.

எனவே, இது வாக்களித்த மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம்." என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான நளின் பண்டார, துஷார இந்துனில் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

ஹக்கீம், ரிஷாட் ஆகியோர் '20' ஐ எதிர்த்ததுகூட அரசியல் தந்திரமே எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு சந்தர்ப்பவாத அரசியல் நடத்துபவர்களை வைத்துக்கொண்டு பயணிக்கமுடியாது என்பதால் அவர்கள் அங்கம் வகிக்கும் கட்சிகளை கூட்டணியில் இருந்து நீக்கவேண்டும் என சஜித்திடம் எம்.பிக்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகேவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி, மேற்படி இரு கட்சிகள் தொடர்பிலும் இவ்வாரத்துக்குள் முடிவொன்றை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-44)

# கொரோனா எதிரொலி!

### பேருவளை துறைமுகத்துக்கு பூட்டு

களுத்துறை, ஒக்.23

பேருவளை மீன்பிடித் துறைமுகம் இன்று முதல் மறுஅறிவித்தல் வரை மூடப்படுகிறது என துறைமுக அதிகாரி எட்வர்ட் தயாமல் தெரிவித்துள்ளார்.

பேருவளை மீன்பிடித் துறைமுகத்தில் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பேருவளை மீன்பிடித் துறைமுக வளாகத்தில் நேற்று மாத்திரம் 100 பேருக்கு பீ.சீ.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் 16 பேரின் முடிவுகள் நேற்று இரவு வெளியாகிய நிலையில் அவர்களில் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என பேருவளை சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். இன்று பேருவளை மீன்பிடித் துறைமுகம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் தொடர்ந்து பீ.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (வ-இ)

### ஹற்றன் இறைச்சிக் கடைகளுக்கு பூட்டு

ஹட்டன், ஒக்.23

ஹட்டன் நகரிலுள்ள சகல இறைச்சிக் கடைகளும் மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரையில் மூடப்பட்டுள்ளது. ஹட்டன் - டிக்கோயா நகர சபையின் பொது மக்கள் சுகாதார பரிசோதகர்கள், ஹட்டன் பொலிஸாரின் அறிவுறுத்தலின் பிரகாரம் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, பேலியகொட மீன்பிடி சந்தையிலிருந்து மீன்களை கொள்வனவு செய்து விற்பனை செய்வதனால், ஹட்டனிலுள்ள சகல இறைச்சி கடை ஊழியர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள நட வடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (வ-இ)

# மஞ்சளில் கலப்படம்; ஆலை முற்றுகை

கண்டி, ஒக்.23

மஞ்சளுடன் அரிசிமாவை கலந்து விற்பனை செய்துவந்த ஆலையொன்று முற்றுகையிடப்பட்டு பாவனைக்கு உதவாத 82 கிலோ மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டி அரச புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய தவுலகல, பூவெலிக்கட கெலிஓயா வீதியில் அமைந்துள்ள ஆலையொன்றிலேயே இந்த சுற்றிவளைப்பு நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதன் போது மஞ்சளுடன் கலப்பதற்காக வைக்கப்பட்டிருந்த ஒருதொகை அரிசியும் அதனை மாவாக்கப் பயன்படுத்தப்பட்ட அரைக்கும் இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-இ)



# ஏடு தொடக்குவதற்கு ஏற்ற நாள் எது?

## விளக்குகிறார் இந்துமத குருபீடாதிபதி

கொழும்பு, ஒக.23

ஏடு தொடக்குவதற்கு எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமையே சிறந்த நாள் என சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஐயப்பதாச குருக்கள் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, தசமியில் ஏடு தொடக்குதல் குழந்தைகளுக்கு நல்ல ஞானத்தைக் கொடுக்கவல்லது. நாளைமறுதினம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி 16 நிமிடம் வரை நவமி திதி நிற்பதனால். நவமியில் ஏடு தொடக்கக்கூடாது எனவே மறுநாள் திங்கட்கிழமை தசமியிலேயே வித்யாரம்பம் செய்யவேண்டும். அட்டமி மற்றும் நவமி திதியில் சுப காரியங்கள் எதையுமே ஆரம்பிக்கமாட்டார்கள். எனவே திங்கள் காலை 9 மணி 3 நிமிடத்துக்கு மேல். 10.மணி 15.நிமிடத்துக்குள் ஏடு தொடக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். (வ-159)

### தூதரக ஊழியர் கடத்தல் விவகாரம்; குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு, ஒக்.23

சுவிஸ் தூதரக ஊழியர் கார்னியா பெனிஸ்டர் பிரான்சிஸுக்கு எதிராக சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வு அதிகாரிகளினால் தான் கடத்தப்பட்டார் என்று போலியான ஆதாரங்களை உருவாக்கினார் என, அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# ஹோமாகமவில் மீன் விற்பனை நிலைய உரிமையாளருக்கு கொரோனா

கொழும்பு,ஒக். 23

ஹோமாகம பிரதேச சபைக்குச் சொந்தமான சந்தை தொகுதியிலுள்ள மீன் விற்பனை நிலையத்தின் உரிமையாளர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று ஹோமாகம சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.



இவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து இந்த விற்பனை நிலையம் மூடப்பட்டுள்ளது. இந்த உரிமையாளரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் விற்பனை நிலையத்தின் 17 ஊழியர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

# கொரோனாத் தடுப்பூசி பரிசோதனை; பங்கேற்ற தன்னார்வலர் உயிரிழப்பு

நியூயோர்க், ஒக்.23

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் உருவாக்கிய கொரோனாத் தடுப்பூசி மருத்துவ பரிசோதனையில் பங்கேற்ற தன்னார்வலர் ஒருவர் பிரேசிலில் உயிரிழந்துள்ளாரி என அதிகாரிகள் அறிவித்தனர்.




உலகளவில் நடைபெற்று வரும் பல்வேறு கொரோனாத் தடுப்பூசி சோதனைகளில் நடந்துள்ள முதல் உயிரிழப்பு இதுவாகும்.

உலகம் முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனாத் தடுப்பூசி பரிசோதனைகளில் இங்கிலாந்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் அஸ்ட்ராஜெனெகா கூட்டணியில் தயாரிக்கப்பட்டுள்ள கொரோனா தடுப்பூசி முன்னணியில் இருந்து வருகிறது. ஒக்ஸ்போர்ட் தடுப்பூசியின் 1 மற்றும் 2 ஆம் கட்ட சோதனைகள் சிலநல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இந்த தடுப்பூசியை மனிதர்களுக்கு செலுத்திப் பார்க்கும் இறுதிக்கட்ட மருத்துவ பரிசோதனை இங்கிலாந்து, இந்தியா, பிரேசில், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த பரிசோதனையில் ஆயிரக்கணக்கான தன்னாவலர்கள் பங்கேற்றுள்ளனர். இந்நிலையில், பிரேசிலின் ரியோ டிஜெனிரோவைச்சேர்ந்த மருத்துவர்ஜோனோ பீடோசா (வயது 28) என்ற தன்னார்வலர் உயிரிழந்துள்ளார். இதேவேளை தடுப்பூசி பரிசோதனை தொடரும் என்று அஸ்ட்ராஜெனேகா மருந்து தயா ரிப்பு நிறுவன ஆய்வின் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-இ)

## மசூதி மீது தாக்குதல் 11 சிறுவர்கள் உயிரிழப்பு

காபூல், ஒக்.23

ஆப்கானிஸ்தானில் உள்ள மசூதியில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் 11 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். ஆப்கானிஸ்தானின் வடகிழக்குப் பகுதியில் தாஹர் மாகாணத்தில் உள்ள மசூதி ஒன்றின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது, மசூதியில் கற்றுக் கொண்டிருந்த 11 சிறுவர்களும் அவர்களுக்கு கற்பித்த ஒருவருமாக 12 பேர் உயிரிழந்துள்ளனர். தாக்குதலில் காயமடைந்த பலர் அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர். (வ-இ)



## துருக்கியை புறக்கணிக்க சவூதி அரேபியா முடிவு

துருக்கி நாட்டுப் பொருள்களை புறக்கணிக்க சவூதி அரேபியா முடிவு செய்துள்ளது.

இதனால் இரு நாடுகளுக்கு இடையிலான உறவுநிலை மேலும் மோசமடைந்துள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஊடகவியலாளரான ஜமால் கசோக்கி என்பவர் சவூதி அரேபியாவில் துருக்கி தூதரகத்தில் இரு ஆண்டுகளுக்கு முன் கொல்லப்பட்ட நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல் போக்கு நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## தடுப்பூசி ஏற்றப்பட்ட 25 பேர் உயிரிழப்பு

சியோல், ஒக்.23

தென்கொரியாவில் பருவ காலத்தில் ஏற்படும் காய்ச்சலுக்கான தடுப்பூசி போட்டுக்கொண்ட 25 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விவகாரம் அங்கு பெரும் சோகத்தையும் பொதுமக்களிடையே அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பில் தென்கொரிய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தடுப்பூசி போட்டுக்கொண்டதால் உயிரிழந்தனர் எனக் கூறப்படுகிற 9 சந்தேக மரணங்கள் குறித்து விசாரித்தோம். அதில் தடுப்பூசி போட்டுக்கொண்டதற்கும், உயிரிழப்புக்கும் தொடர்பு இல்லை என தெரிய வந்துள்ளது.

தடுப்பூசி போட்டுக்கொண்டதால் ஏற்பட்ட தீவிர ஒவ்வாமை எதிர்வினையால் இறப்பு நேர்ந்திருக்கக்கூடும் என சொல்லப்படுகிறது. ஆனால் இது உறுதி செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வஇ)





## பெரும் அழிவின் சாட்சியம்

அண்மையில் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நிகழ்ந்த பெரும் வெடிப்புச் சம்பவம் அந் நகரின் பெரும் அழிவுக்கு வித்திட்டது. இந்நிலையில் வெடிப்பின் போது நொருங்கிய கண்ணாடிகள், கட்டட இடிபாடுகளைக் கொண்டு சிற்பம் ஒன்றை உருவாக்கியுள்ளார் லெபனானைச் சேர்ந்த பெண் சிற்பி ஹயாட் நாஷீர். இதில் அவர் வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்த அந்தக் கணத்தை பதிவுசெய்யும் வகையில் அந்த நேரத்தில் சேதமடைந்த கடிகாரத்தையும் பயன்படுத்தியுள்ளார் .




## பல்பொருள் அங்காடியில் தீ! 3 , 500 பேர் வெளியேற்றம்

புதுடில்லி, ஒக்.23

மும்பையில் நகபடா என்ற நகரில் பல்பொருள் அங்காடியில் பெரும் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. இந்த தீவிபத்து நேற்று இரவு 8.15 மணியளவில் ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் சிறியளவில் பரவிய தீ நேரம் செல்லக் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்துள்ளது. இதையடுத்து, தீயணைப்பு வீரர்கள் வரவழைக்கப்பட்டு தீய ணைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. விபத்தையடுத்து பல்பொருள் அங்காடியில் அருகில் இருந்த 55 மாடிகள் கொண்ட அடுக்கு மாடி குடியிருப்பில் வசித்த மக்கள் சுமார் 3 ஆயிரத்து 500 பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

24 தீ அணைப்பு வாகனங்களின் உதவியோடு தீயை அணைக்கும் பணியில் சுமார் 250 வீரர்கள் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# பொம்மேர்ஸ் பிளாஸ்ரர் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஒக்.23

பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழகம் தமது அங்கத்துவ வீரர்களுக்கிடையே முதன் முறையாக நடத்தும் பொம்மேர்ஸ் பிறீமியர் லீக் சுற்றுப் போட்டியில் பொம்மேர்ஸ் பிளாஸ்ரர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பொம்மேர்ஸ் பிளாஸ்ரர் அணியை எதிர்த்து, பொம்மேர்ஸ் ரொக்கர்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பொம்மேர்ஸ் ரொக்கர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றனர். அந்த அணி சார்பில் அதிக பட்சமாக கோபிநாத் 20 ஓட்டங்களையும், ராகுலன் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் பொம்மேர்ஸ் பிளாஸ்ரர் அணி சார்பில் ஜெய்கர், நரேஸ் ஆகியோர் தலா இரு




இலக்குகளையும் ரகுராம் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பொம்மேர்ஸ் பிளாஸ்ரர் அணி 9.1 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து, 61 ஓட்டங்களைப் பெற்று 6 இலக்குகளால் பொம்மேர்ஸ் பிளாஸ்ரர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. அந்த அணி சார்பில் நரேஸ் 13 ஓட்டங்களையும், நீரஜன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பொம்மேர்ஸ் ரொக்கர்ஸ் அணி சார்பில் விமல்ராஜ் 2 இலக்குகளையும், கோபிநாத், நிசாந்தன், கோகுலன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதில் ஆட்ட நாயகனாக பொம்மேர்ஸ் பிளாஸ்ரர் அணி வீரர் நரேஸ், தொடர் ஆட்ட நாயகனாக பொம்மேர்ஸ் பிளாஸ்ரர் அணி வீரர் நீரஜன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.(ற-422)



## டுவைன் பிராவோ விலகல்

புதுடில்லி, ஒக்.23

ஐ.பி.எல். இருபதுக்கு இருபது தொடரின் எஞ்சிய போட்டிகளிலிருந்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் சகல துறை வீரர் டுவைன் பிராவோ வெளியேறியுள்ளார்.

ஒக்ரோபர் 17 ஆம் திகதி டெல்லி அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது அவருக்கு ஏற்பட்ட இடுப்புக் காயம் காரணமாக அவர் போட்டிகளிலிருந்து விலகியுள்ளார்.

இதனால் அவர் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து வெளியேறத் தயாராக உள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதை சென்னை சுப்பர் கிங்ஸின் தலைமை நிர்வாக அதிகாரி காசி விஸ்வநாதன் உறுதிப்படுத்தியுள்ளார். (ற)

## பூப்பந்து போட்டி ரத்து

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக உலக ஜூனியர் பூப்பந்துப் போட்டி ரத்து செய்யப்பட்டுள்ளது என்று உலக பூப்பந்து சம்மேளனம் நேற்று அறிவித்துள்ளது.

இந்த ஆண்டுக்கான உலக ஜூனியர் பூப்பந்து சம்பியன்ஷிப் போட்டியை நியூசிலாந்தில் இந்த மாதம் நடத்த முதலில் திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் கொரோனா அச்சுறுத்தலால் இந்தப் போட்டி அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அடுத்த ஆண்டுக்கான உலக ஜூனியர் பூப்பந்துப் போட்டியை நடத்த சீனாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருப்பதுடன், 2023 ஆம் ஆண்டு வரை இந்த போட்டியை நடத்தும் உரிமம் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது.

எனவே இந்த ஆண்டுக்கான போட்டியை மேலும் தள்ளிப் போட முடியாது என்றும், உலக ஜூனியர் பூப்பந்துப் போட்டியை நடத்த நியூசிலாந்து தொடர்ந்து ஆர்வம் காட்டியதால் 2024 ஆம் ஆண்டுக்கான போட்டியை நடத்தும் உரிமையை அந்த நாட்டுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



## தகுதிகாண் போட்டி ரத்து

கொழும்பு, ஒக்.23

தேசிய குழாம் தெரிவுக்கான தகுதிகாண் போட்டிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை மெய்வல்லுநர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நாளை 24 ஆம் மற்றும் 25 ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்த போட்டிகளே இவ்வாறு ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுகததாஸ விளையாட்டரங்கு அமைந்துள்ள கொழும்பு 13 புளூமெண்டல் பகுதியில் இந்த நாள்களில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதால் தகுதிகாண் போட்டிகள் நடத்த முடியாது போயுள்ளது என்று இலங்கை மெய்வல்லுநர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ற)

## சரித்திர சாதனை படைத்தார் சிராஜ்

புதுடில்லி, ஒக்.23

கொல்கத்தா அணிக்கு எதிராக இரண்டு மெய்டன் பந்துகள் வீசி ஆர்.சி.பி பந்து வீச்சாளர் முகமது சிராஜ் சாதனை படைத்துள்ளார்.



அபுதாபியில் நடைபெற்று வரும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரண்டு மெய்டன் பந்துகள் வீசி ஐ.பி.எல்லில் சரித்திர சாதனை படைத்துள்ளார் பெங்களூர் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜ்.

இந்த ஆட்டத்தில் நான்கு பந்துகள் வீசிய சிராஜ் மூன்று இலக்குகளை வீழ்த்தி வெறும் 8 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தார். அதில், இரண்டு மெய்டன் பந்துகளும் அடங்கும். இதன்மூலம் ஒரே ஆட்டத்தில் இரண்டு மெய்டன் பந்துகள் வீசிய பந்து வீச்சாளர் என்ற சாதனைக்கு சிராஜ் சொந்தக்காரரானார்.

கொல்கத்தா துடுப்பாட்ட வீரர்களான ராகுல் திரிபாதி, நிதிஷ் ராணா மற்றும் டாம் பாண்டனை அவுட் செய்தார் அவர். (ற)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 23.10.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.